**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 9** |
| **Name** | **:** | திரு. பன்னீர் |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.01.2024**

எதிரிகள் 1.,2 ஆஜர். எதிரிகள் 3 முதல் 6 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் கீழக்குயில்குடியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நான் ஆஜர் எதிரிகளுக்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறேன். சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 09.00, 10.00 மணி இருக்கும். சத்தம் கேட்டது. வெளியில் வந்து பார்த்தோம். பக்கத்து வீட்டில் உள்ள விருமாண்டியின் மனைவி இறந்ததாக கேள்விப்பட்டேன். அவரை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்கள். விருமாண்டியின் மனைவியை வீட்டிற்கு திரும்ப கொண்டு வந்தார்கள். விருமாண்டியின் மாமனார் வீட்டில் இருந்து வந்தார்கள். அழுதார்கள். பேசினார்கள். பின்பு போலிசார் வந்து விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

நான் விருமாண்டி வீட்டிற்குப் பக்கத்தில் வசித்து வருவதால் அவர்கள் வீட்டில் நல்லது கெட்டது நடந்தால் எனக்குத் தெரியும். விருமாண்டியின் திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன். அவர்கள் இருவரும் பிரச்சனை இல்லாமல் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். விருமாண்டிக்கும் அவரது மாமனார் வீட்டிற்கும் இடையே எதுவும் பிரச்சனை இருந்ததாக நான் கேள்விப்படவில்லை. விருமாண்டியின் மனைவி இறந்தவுடன் அவரது வீட்டில் இருந்து ஆட்கள் வந்தார்கள். சிவப்பிரியாவிற்கு போட்ட நகைகளை வாங்கிக்கொண்டு அடக்கம் செய்து விட்டார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை